**உழவர்கரை நகராட்சி**
**புதுச்சேரி-5**

**செய்திக்குறிப்பு**

## சொத்துவரி செலுத்த வேண்டி முக்கிய அறிவிப்பு

சொத்துவரி என்பது ஒவ்வொரு நிதி ஆண்டின் ஆரம்ப கட்டத்திலேயே அதாவது ஒரு நிதியாண்டில் முதல் அரையாண்டுக்கு ஏப்ரல் மாதம் 15-ம் தேதி மற்றும் அடுத்த அரையாண்டுக்கு அக்டோபர் மாதம் 15-ம் தேதிக்குள் செலுத்தியாக வேண்டும். அதன்படி உழவர்கரை நகராட்சி எல்லைக்குட்பட்ட வீடு மற்றும் வணிக நிறுவனங்களுக்கு 2020-21-ம் ஆண்டுக்கான சொத்துவரி செலுத்த வேண்டிய கேட்பு அறிக்கை (Demand Notice) இருமுறை அனைத்து கட்டிட உரிமையாளர்களுக்கும் இந்நகராட்சியால் கொடுக்கப்பட்டுவிட்டது. மேலும், கட்டிட/நில உரிமையாளர்களின் தற்போதைய முகவரி தெரியாதவர்களது கேட்பு அறிக்கை அவர்களது கட்டிடத்தில்/நிலத்தின் அருகில் ஒட்டப்பட்டுள்ளது. இருப்பினும் அதிகப்படியானோர் நடப்பு நிதியாண்டிற்கான சொத்துவரி மற்றும் நிலுவைத் தொகை இன்று வரை செலுத்தாமல் பாக்கி வைத்துள்ளனர்.

புதுச்சேரி நகராட்சிகள் சட்டம், 1973-ன் கீழ் பிரிவு 177-ன் படி கேட்பு அறிக்கை கொடுக்கப்பட்டு 15 நாட்களுக்குள் வரி செலுத்தாமல் உள்ளவர்களது வரிக்கு நிகரான அசையும் சொத்துகளை ஜப்தி செய்ய பிடியாணை பிறப்பிக்க வழிவகை உள்ளது. அதன்படி கேட்பு அறிக்கை கொடுத்து 15 நாட்களுக்கு பிறகும் வரி செலுத்தாதவர்களின் அசையும் சொத்துகளை ஜப்தி செய்து பிரிவு 181-ன் படி விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் உரிய காலத்திற்குள் சொத்துவரி செலுத்தி ஜப்தி நடவடிக்கைகளை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் கேட்பு அறிக்கை கிடைக்கப் பெறாதவர்கள் எவரேனும் இருந்தால் தட்டாஞ்சாவடி வி.வி.பி நகரில் உள்ள கணினி சொத்துவரி வசூல் மையத்தை அணுகி பெற்றுக்கொள்ளலாம்.

**M. கந்தசாமி**
**ஆணையர்**

---

கோ.எண்: 1212/உ.நா/வருவாய்/2020 தேதி, 17-12-2020

மேற்கண்ட செய்தியை தங்கள் பத்திரிக்கையில் வெளியிடுமாறு / டி.வி.யில் செய்திப்பகுதியில் ஒளிப்பரப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

Kandasamy 17/12/2020

**(M. கந்தசாமி)**
**ஆணையர்**

பெறுநர்